**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 74/2025**
**Dated :11.05.2026**
**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனலட்சுமி | வயது | : | 32 |
| கணவர் பெயர் | : | பாலசுந்தர் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கந்தர்வகோட்டை | தொழில் | : | வீட்டுக் குடித்தனம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(2வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் எதிரி தவச்செல்வம் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 01.10.2024 ஆம் தேதி இரவு சுமார் 9.00 மணியளவில் நானும் எனது கணவர் பாலசுந்தர், எனது தாயார் புஷ்பம், எனது அக்கா கணவர் வினோத் ஆகியோர் கோவிலுக்கு சென்றுவிட்டு, எங்கள் வீட்டிற்கு வந்தோம்.நாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தவுடனே வீட்டு வாசலில் வைத்து எதிரிகள் தவச்செல்வம், புஷ்பராஜ் ஆகியோர் குடிபோதையில் அங்கு நின்று கொண்டு எங்களை பார்த்து தேவிடியா மகளே என்று அசிங்கமாக திட்டினார்கள். எனது கணவர் பாலசுந்தர், ஏன் கெட்ட வார்த்தை சொல்லி திட்டுகிறீர்கள் என்று கேட்ட போது, எதிரிகள் கட்டையால் எனது வலது கையில் அடித்து விட்டார்கள். அதனை, எனது கணவர், எனது அக்கா கணவர் மற்றும் எனது தாயார் தடுக்க வந்த போது, எதிரிகள் எனது கணவரை கட்டையால் அடிக்க வந்தபோது அவர் தடுத்து விட்டார். எதிரி புஷ்பராஜ், எனது அம்மாவை கட்டையால் தலையில் அடித்து விட்டார். அதனால் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எதிரி புஷ்பராஜ் எனது அக்கா கணவரை, கட்டையால் பின் தலையில் அடித்து விட்டார். அதனால் அவருக்கு நரம்பு பாதிப்பு ஏற்பட்டது. சண்டையில் அவருக்கு உதட்டிலும் காயம் ஏற்பட்டது.

**சாட்சியின்கையொப்பம்** **மா.உ/நீ.ந**

பின்னர், எதிரிகள் இருவரும் எங்களை பார்த்து  உங்களை கொல்லாமல் விடமாட்டோம், நீங்கள் எங்கே போய் புகார் கொடுத்தாலும், எங்கள் மயிரை கூட புடுங்க முடியாது ஒரு கொலை செய்தாலும் ஒரே தண்டனை தான் பல கொலைகள் செய்தாலும் ஒரே தண்டனை தான் தன் நண்பர்களை வைத்து உங்களை கொன்று விடுவோம்  என்று மிரட்டினார்கள். பின்னர், நாங்கள் கந்தர்வகோட்டை காவல் நிலையம் சென்று, புகார் கொடுத்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில்  உள்ள  கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் மனு நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் மனு  அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நாங்கள் ரத்த காயத்துடன் இருந்ததால் மருத்துவமனை செல்லும் படி அறிவுறுத்தினார்கள். காயம்பட்ட நானும், எனது தாயார் மற்றும் எனது அக்கா கணவர் ஆகியோர் கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்றோம். நான் பத்து நாட்களும், எனது அக்கா கணவர் ஒரு மாதமும் சிகிச்சையில் இருந்தோம்.  போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நாங்கள் மருத்துவ நகரில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரிகளும் அங்கு தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் உறவினர்கள் என்றால் சரிதான். 1 வது எதிரி தவச்செல்வம், அப்போது எங்கள் வார்டு கவுன்சிலர் ஆக இருந்தார் என்றால் சரிதான். அந்த வார்டில், தண்ணீர் குழாய் அமைப்பது, மின் வசதி அமைப்பு ஏற்படுத்துவது போன்ற வேலைகளை செய்வார் என்றால் சரிதான். அவருக்கு உதவியாக புஷ்பராஜ் இருந்தார் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு தண்ணீர் இணைப்பு கொடுக்கவில்லை என எதிரிகள் மீது வருத்தமாக இருந்தோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் லைட் வெளிச்சம் இல்லாத  இரவு நேரம் என்றால் சரிதான். அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு ஆள் நடமாட்டம் இருந்தது என்றால் சரிதான்.

நாங்கள் கோவிலுக்கு சென்றுவிட்டு, இருசக்கர வாகனத்தில் வீட்டுக்கு வந்தோம் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். நாங்கள் இருசக்கர வாகனத்தில் அளவுக்கு அதிகமாக பயணம் செய்து இருட்டில் தடுமாறி கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டது என்றாலும் அதனை பயன்படுத்தி எதிரிகளின் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக அவர்கள் மீது பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களை கெட்ட வார்த்தை சொல்லி திட்டவில்லை

என்றாலும் எங்களை தாக்கவில்லை என்றாலும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.11 15:43:54 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 74/2025**
**Dated :11.05.2026**
**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW2 Examined as PW2 (Victim)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுந்தர் | வயது | : | 32 |
| தந்தை பெயர் | : | ராமசாமி | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கந்தர்வகோட்டை | தொழில் | : | சலூன் கடை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(2வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து சலூன் கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரி மற்றும் எதிரி தவச்செல்வம் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 01.10.2024 ஆம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் நானும் எனது மனைவி, எனது மாமியார் புஷ்பம், எனது சகலை வினோத் ஆகியோர் கோவிலுக்கு சென்றுவிட்டு, எங்கள் வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வந்தோம். நாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தவுடனே வீட்டு வாசலில் வைத்து எதிரிகள் தவச்செல்வம், புஷ்பராஜ் ஆகியோர் குடிபோதையில் அங்கு நின்று கொண்டு எங்களை பார்த்து தேவிடியா மகள்களா நீங்கள் செய்வது சரியில்லை என்று அசிங்கமாக திட்டினார்கள். நான் ஏன் கெட்ட வார்த்தை சொல்லி திட்டுகிறீர்கள் என்று கேட்ட போது, எதிரி புஷ்பராஜ் கட்டையால் எனது மனைவி வலது கையில் அடித்து விட்டார். பின்னர், கட்டையால் எனது மாமியாரை தலையில் அடித்து அவரை கீழே தள்ளி விட்டார். எதிரிகள் இருவரும் சேர்ந்து என்னை கட்டையால் அடிக்க வந்தார்கள். நான் தடுத்துவிட்டேன். எதிரிகள் இருவரும் என்னை கையால் அடித்தார்கள். அதனை தடுக்க வந்த எனது சகலை வினோத் என்பவரை எதிரி புஷ்பராஜ் கட்டையால் பின் தலையில் பிடரியில் அடித்து விட்டார்.

**சாட்சியின்கையொப்பம்** **மா.உ/நீ.ந**

எதிரிகள் அடித்ததில் எனது மனைவிக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. எனது மாமியாருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது சகலைக்கு நரம்பு பாதிப்பு ஏற்பட்டது. அதனால் அவருக்கு கண்பார்வை சரியாக தெரியவில்லை. சண்டையில் அவருக்கு வலது தோளில் சிராய்ப்பு காயமும் உதட்டில் காயமும் ஏற்பட்டது.

பின்னர், எதிரிகள் இருவரும் எங்களை பார்த்து நீங்கள் எங்கே போய் புகார் கொடுத்தாலும், எங்கள் மயிரை கூட புடுங்க முடியாது ஒரு கொலை செய்தாலும் ஒரே தண்டனை தான் பல கொலைகள் செய்தாலும் ஒரே தண்டனை தான் தன் நண்பர்களை வைத்து உங்களை கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள். பின்னர், நாங்கள் கந்தர்வகோட்டை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றோம். நாங்கள் ரத்த காயத்துடன் இருந்ததால் மருத்துவமனை செல்லும் படி அறிவுறுத்தினார்கள். காயம்பட்ட எனது மனைவி, எனது மாமியார் மற்றும் எனது சகலை ஆகியோர் கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார்கள். பின்னர், காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்றார்கள். எனது மனைவியும் மாமியாரும் பதினைந்து நாட்களும், எனது சகலை ஒரு மாதமும் சிகிச்சையில் இருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நாங்கள் மருத்துவ நகரில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரிகளும் அங்கு தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் உறவினர்கள் என்றால் எனது சகலைக்கு தான் உறவினர்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இருந்து தற்போது வரை எதிரிகளை வழியில் பார்ப்பேன் என்றால் சரிதான். அதனால், நான் பயந்து போனதில்லை என்றால் சரியல்ல. நானும் எனது குடும்பத்தாரும் பயந்து போயிருக்கிறோம். 1 வது எதிரி தவச்செல்வம், அப்போது எங்கள் வார்டு கவுன்சிலர் ஆக இருந்தார் என்றால் சரியல்ல. அவரது தாயார் தான் கவுன்சிலராக இருந்தார். அந்த வார்டில், தண்ணீர் குழாய் அமைப்பது, மின் வசதி அமைப்பு ஏற்படுத்துவது போன்ற வேலைகளை தவச்செல்வம் செய்வார் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு தண்ணீர் இணைப்பு கொடுக்கவில்லை என எதிரிகள் மீது வருத்தமாக இருந்தோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் லைட் வெளிச்சம் இல்லாத இரவு நேரம் என்றால் சரியல்ல. லைட் வெளிச்சம் இருந்தது. அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு ஆள் நடமாட்டம் இருந்தது என்றால் சரிதான். எங்களை எதிரிகள் அடித்த போது யாரும் அருகில் வரவில்லை. தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்தார்கள். யாரும் வந்தால் அவரையும்

அடிப்போம் என்று எதிரிகள் சொன்னார்கள். மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றால் இல்லை. எனது சகலைக்கும் எதிரிகளுக்கும் தான் குடும்ப பிரச்சனை இருந்தது. எனது சகலைக்கு நாங்கள் ஆதரவாக இருப்பதாக நினைத்துக் கொண்டு எதிரிகள் எங்களை தாக்கினார்கள். நாங்கள் இருசக்கர வாகனத்தில் அளவுக்கு அதிகமாக பயணம் செய்து இருட்டில் தடுமாறி கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டது என்றாலும் அதனை பயன்படுத்தி எதிரிகளின் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக அவர்கள் மீது எனது மனைவி பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களை கெட்ட வார்த்தை சொல்லி திட்டவில்லை என்றாலும் எங்களை தாக்கவில்லை என்றாலும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.11 15:44:09 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 74/2025**
**Dated :11.05.2026**
**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW3 Examined as PW3 (Victim)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | புஷ்பம் | வயது | : | 50 |
| கணவர் பெயர் | : | கலியபெருமாள் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கந்தர்வகோட்டை | தொழில் | : | வீட்டுக் குடித்தனம். |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(2வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். அ.சா.2 மற்றும் சாட்சி வினோத் எனது மருமகன்கள் ஆவார்கள். ஆஜர் எதிரி மற்றும் எதிரி தவச்செல்வம் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 1 ஆம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை இரவு சுமார் 9.00 மணியளவில் நானும் எனது மகள், எனது மருமகன்கள் ஆகியோர் கோவிலுக்கு சென்றுவிட்டு, எங்கள் வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வந்தோம். நாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தவுடனே வீட்டு வாசலில் இருந்த போது எதிரிகள் தவச்செல்வம், புஷ்பராஜ் ஆகியோர் கட்டையுடன் அங்கு வந்தார்கள். எதிரி புஷ்பராஜ், கட்டையால் எனது தலையில் அடித்துவிட்டார். எதிரி புஷ்பராஜ், எனது மருமகன் வினோத்தை கட்டையால் பின் கழுத்தில் அடித்துவிட்டார். எதிரி புஷ்பராஜ், கட்டையால் எனது மகளின் வலது கையில் அடித்துவிட்டார்.

**சாட்சியின்கையொப்பம்** **மா.உ/நீ.ந**

பின்னர், நாங்கள் கந்தர்வகோட்டை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றோம். நாங்கள் ரத்த காயத்துடன் இருந்ததால் மருத்துவமனை செல்லும் படி அறிவுறுத்தினார்கள். காயம்பட்ட நானும், எனது மகள், எனது மருமகன் வினோத் ஆகியோர் கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்றோம். நானும் எனது மகளும் பத்து நாட்கள் சிகிச்சையில் இருந்தோம். எனது மருமகன் வினோத் ரொம்ப நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வினோத்திற்கும் எதிரி புஷ்பராஜிற்கும் இடையே முன் விரோதம் இருந்தது என்றால் சரிதான். நாங்கள் இருசக்கர வாகனத்தில் அளவுக்கு அதிகமாக பயணம் செய்து இருட்டில் தடுமாறி கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டது என்றாலும் அதனை பயன்படுத்தி எதிரிகளின் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக அவர்கள் மீது எனது மகள் பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் மருத்துவ நகரில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரிகளும் அங்கு தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் உறவினர்கள் என்றால் எனது சகலைக்கு தான் உறவினர்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இருந்து தற்போது வரை எதிரிகளை வழியில் பார்ப்பேன் என்றால் சரிதான். அதனால், நான் பயந்து போனதில்லை என்றால் சரியல்ல. நானும் எனது குடும்பத்தாரும் பயந்து போயிருக்கிறோம். 1 வது எதிரி தவச்செல்வம், அப்போது எங்கள் வார்டு கவுன்சிலர் ஆக இருந்தார் என்றால் சரியல்ல. அவரது தாயார் தான் கவுன்சிலராக இருந்தார். அந்த வார்டில், தண்ணீர் குழாய் அமைப்பது, மின் வசதி அமைப்பு ஏற்படுத்துவது போன்ற வேலைகளை தவச்செல்வம் செய்வார் என்றால் சரியல்ல.

எங்கள் வீட்டிற்கு தண்ணீர் இணைப்பு கொடுக்கவில்லை என எதிரிகள் மீது வருத்தமாக இருந்தோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் லைட் வெளிச்சம் இல்லாத இரவு நேரம் என்றால் சரியல்ல. லைட் வெளிச்சம் இருந்தது. அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு ஆள் நடமாட்டம் இருந்தது என்றால் சரிதான். எங்களை எதிரிகள் அடித்த போது யாரும் அருகில் வரவில்லை. தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்தார்கள். யாரும் வந்தால் அவரையும் அடிப்போம் என்று எதிரிகள் சொன்னார்கள். மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரிகள் எங்களை கெட்ட வார்த்தை

சொல்லி திட்டவில்லை என்றாலும் எங்களை தாக்கவில்லை என்றாலும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.11 15:44:18 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 74/2025**
**Dated :11.05.2026**
**Deposition of witness for : P.W.4**

**List of Witness LW4 Examined as PW4 (Victim)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வினோத் | வயது | : | 37 |
| தந்தை பெயர் | : | நெடுமாறன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கந்தர்வகோட்டை | தொழில் | : | சலூன் கடை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(2வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து சலூன் கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவியின் தங்கை ஆவார். அ.சா.2 எனது சகலை ஆவார். அ.சா.3 எனது மாமியார் ஆவார். ஆஜர் எதிரி மற்றும் எதிரி தவச்செல்வம் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 01.10.2024 ஆம் தேதி இரவு சுமார் 9.00 மணிக்கு மேல், நானும் எனது மாமியார் புஷ்பம், எனது சகலை பாலசுந்தர் மற்றும் எனது கொழுந்தியா தனலட்சுமி ஆகியோர் கோவிலுக்கு சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் வந்து, மருத்துவ நகரில் உள்ள எனது மாமியார் வீட்டுக்கு வெளியில் நின்று கொண்டிருந்தோம். நாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தவுடனே வீட்டு வாசலில் வைத்து எதிரி புஷ்பராஜ் என்னை கையால் தள்ளினார். பின்னர், எனது மாமியாரை கட்டையால் தலையில் அடித்தார். பின்னர், எனது கொழுந்தியாளை வலது கையில் அடித்தார். பின்னர், மீண்டும் என்னை பின் கழுத்தில் கட்டையால் அடித்தார். மீண்டும் என்னை கட்டையால் அடிக்க வந்தபோது, தடுத்ததில் கட்டை எனது உதட்டில் பட்டு இரத்த காயம் ஏற்பட்டது.

**சாட்சியின்கையொப்பம்** **மா.உ/நீ.ந**

எதிரி புஷ்பராஜ் தாக்கியதால், எனக்கு பின் கழுத்து நரம்பில் பாதிப்பு ஏற்பட்டு, எனக்கு கண்பார்வையில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. எதிரி புஷ்பராஜ் அடித்து கொண்டிருந்த போதே எதிரி தவச்செல்வமும் குச்சியால், எங்கள் நால்வரையும் தாக்கினார். பின்னர், நாங்கள் கந்தர்வகோட்டை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றோம். நாங்கள் ரத்த காயத்துடன் இருந்ததால் மருத்துவமனை செல்லும் படி அறிவுறுத்தினார்கள். காயம்பட்ட நானும், எனது கொழுந்தியாள், எனது மாமியார் மற்றும் எனது சகலை ஆகியோர் கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். பின்னர், காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்றோம். எனது கொழுந்தியா மற்றும் மாமியார் பத்து நாட்களும், நான் ஒரு மாதமும் சிகிச்சையில் இருந்தோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நாங்கள் மருத்துவ நகரில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரிகளும் அங்கு தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் உறவினர்கள் என்றால் சரிதான். 1 வது எதிரி தவச்செல்வம், அப்போது எங்கள் வார்டு கவுன்சிலர் ஆக இருந்தார் என்றால் சரியல்ல. அவரது தாயார் தான் கவுன்சிலராக இருந்தார். அந்த வார்டில், தண்ணீர் குழாய் அமைப்பது, மின் வசதி அமைப்பு ஏற்படுத்துவது போன்ற வேலைகளை தவச்செல்வம் செய்வார் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு தண்ணீர் இணைப்பு கொடுக்கவில்லை என எதிரிகள் மீது வருத்தமாக இருந்தோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் லைட் வெளிச்சம் இல்லாத இரவு நேரம் என்றால் சரியல்ல. லைட் வெளிச்சம் இருந்தது. அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு ஆள் நடமாட்டம் இருந்தது என்றால் சரிதான். அவர்கள் சம்பவத்தை பார்த்தார்கள் என்றால் சரிதான்.

எனக்கும் எதிரி தவச்செல்வத்திற்கும் இடையில் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். குடும்ப பிரச்சனை இருந்தது. நாங்கள் இருசக்கர வாகனத்தில் அளவுக்கு அதிகமாக பயணம் செய்து இருட்டில் தடுமாறி கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டது என்றாலும் அதனை பயன்படுத்தி எதிரிகளின் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக அவர்கள் மீது எனது கொழுந்தியா பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம்

அளிக்கிறேன்  என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களை கெட்ட வார்த்தை சொல்லி திட்டவில்லை என்றாலும் எங்களை தாக்கவில்லை என்றாலும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.11 15:44:28 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**சாட்சியின்கையொப்பம்** **மா.உ/நீ.ந**